**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 -ம் நாள் புதன்கிழமை

**O.S. No. 48/2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வைத்தியலிங்கம் | தாலுக்கா | : | பாபநாசம் |
| த/க/பெ. | : | விஸ்வநாதன் | கிராமம் | : | எக்கல் |
| | | | தொழில் | : | வழக்கறிஞர் |
| | | | வயது | : | 76 |

**குறுக்கு விசாரணை யின் தொடர்ச்சி**

இந்த வழக்கினை 2019 ஆம் ஆண்டு நன்னிலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது தகப்பனார் விஸ்வநாத காளிங்கராயர் அவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு நான் மட்டும் வாரிசு இல்லை என்றாலும் இரண்டு சகோதரிகள் மற்றும் இறந்து போன சகோதரரின் வாரிசுகள் உள்ளார்கள் என்றாலும் சரிதான். வழக்கு சொத்தினை பொறுத்து எனக்கும் மற்ற வாரிசுதாரர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏதும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மற்ற வாரிசுகளுக்கு தெரியாமல் நான் பட்டா வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் புல எண் 16/1 ன் மொத்த விஸ்தீர்ணம் 4 செண்ட் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்டபோது அதன் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது தகப்பனார் சொல்லியதன்பேரில் எனக்கு விவரம் தெரியும். வா.சா.ஆ. 3 ஆவணத்தின் வாசகத்தில் புல எண் 16/1 ல் 4 செண்டில் 3 செண்ட் மட்டும் வசம் எடுத்துக் கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புல எண் 16/1 ல் வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி விடுபட்ட 1 செண்ட்டில் 1வது பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரியல்ல. எனது வசம்தான் உள்ளது. 1வது பிரதிவாதியின் வீடு புல எண் 16/1 ல் தான் உள்ளது என்றால் இல்லை புல எண் 16/1 ன் நிலத்திற்கு வடக்கு பக்கம் 1 வது பிரதிவாதி வீடு உள்ளது. புல எண் 16/1 ன் வடக்கு பக்கம் உள்ள இடத்தின் புல எண் என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 வது பிரதிவாதியின் வீடு புல எண் 16/1 ல் 3 செண்டிற்கு வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல, புல எண் 16/1 ன் மீதமுள்ள 1 செண்டினை வசம் எடுத்ததைக்காட்டும் ஆதாரம் ஏதும் வைத்துள்ளோனா என்றால் அதன் உடைமை உரிமை என்னிடம் உள்ளதால் அதனடிப்படையில் வசம் எடுத்துக் கொண்டேன். எனது வழக்குரையில் வழக்கு சொத்து விவரத்தில் காலி மனை என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் புல எண் 16/1 ல் தென்னை மற்றும் பல மரங்கள் உள்ளது என்றால் சரிதான். புல எண் 16/5 ல் மகாகனி மரம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் அனுபவம் என்னிடம் இல்லாததால் தான் மரங்கள் விவரத்தினை வழக்கு சொத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை தவிர வழக்கு கிராமத்தில் வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து

குடவாசல் தாலுக்காவில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான சொத்துக்கள் பாபநாசம் தாலுக்காவிலும் உள்ளது என்றால் சரிதான். புல எண் 16/1 க்கு அடுத்து கிழக்கில் 16/2 ம், அடுத்து கிழக்கில் 16/3 ம், அடுத்து கிழக்கில் 16/4 ம், அடுத்து கிழக்கில் 16/5 ம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்களுக்கு அடுத்து தெற்கில் சிமிழி செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். சாலைக்கு அடுத்து தெற்கில் புல எண் 16/6 C உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்கள் கம்பி வேலிகள் அடைத்து உள்ளது என்றல் சரிதான். ஒவ்வொரு புல எண்ணுக்கும் நடுவில் குறுக்கு வேலி கிடையாது என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் அனைத்து புல எண்களுக்கும் சேர்த்து ஒரே நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தனித்தனியாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். அனைத்து சொத்துக்களுக்கும் ஒரே நான்கெல்லை இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் ஆதியில் 1, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா வாண்டையாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். வழக்கு சொத்தை மயில்வேல் என்பவர் மூலம் பராமரித்து வருகிறேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் எனது தகப்பனார் வசம் எடுக்கவில்லை என்றாலும் அதனை 1, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமையா வாண்டையாருக்கு குத்தகைக்கு கொடுத்து விட்டார் என்றாலும் சரியல்ல. ராமையா வாண்டையாருக்கு குத்தகை கொடுத்ததால் தான் வா.சா.ஆ.4 ஆவணத்தில் குத்தகை பதிவேட்டில் ராமையா வாண்டையார் பெயர் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி குத்தகை பதிவேட்டின் அடிப்படையில் 1, 3 பிரதிவாதிகள் உடலுழைப்பைக் கொண்டு சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு வா.சா.ஆ.4 ஆவணம் உள்ளது பற்றி தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ஆவணம் இருப்பது தெரிந்தும் அதை தெரியாமல் இருப்பதை மறைக்க வா.சா.ஆ. 6 மற்றும் 8 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் விபரம் தெரியும். என்றால் சரிதான். மேற்படி குத்தகை பதிவேட்டினை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் புல எண் 16/6 ல் என்னைப்போன்று சுந்தரவிநாயகர் ஆலயத்திற்கும் அம்மணியம்மாளுக்கும் சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் உட்பிரிவுகள் உள்ளது. மேற்படி அம்மணியம்மாள் சொத்தையும் , சுந்தரவிநாயகர் ஆலய சொத்தையும் 1, 3 பிரதிவாதிகள் தான் சாகுபடி செய்கிறார்கள் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் மயில்வேலுக்கு சொந்தமானதாகும். வா.சா.ஆ.10 ஆவணத்தைமோசடியாக பெற்று நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதனால்தான் மர விவரங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ- 10 ஆவணத்தின்படி வழக்கு சொத்துக்கள் எனது அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்கிறனே் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் இன்று வரை ரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் ரத்து செய்யக் கோரி மனு செய்துள்ளேன். அது நிலுவையில் உள்ளது. நான் மனு செய்தது தொடர்பாக பிரதிவாதிகளுக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 3 ஆவணம் ஏற்பட்ட காலத்தில் இருந்து வருட குத்தகை 60 ரூபாயாக இருந்து 2018 ஆம் ஆண்டு 120 ஆக உயர்த்தப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் பிரதிவாதிகள் உளுந்து பயிர் செய்து தற்போது அவைகளை அழித்து விட்டு காய்ப்பு தென்னை மரங்கள் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருப்பதால் தான்

ஊராட்சி மன்றத்திலிருந்து மின் கம்பிகளை அகற்ற சொல்லி அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் குத்தகை பதிவேட்டில் இருப்பதால் இவ்வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் புல எண் 16/1 ல் நீதிமன்ற ஆணையர் நியமித்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றாலும் எனது அனுபவத்தில்இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் எப்போது பிர்சசினை செய்ததாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளனே் என்றால் 2019 ஆம் ஆண்டு ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள். அது சம்பந்தமாக நான் காவல் துறையில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. பிரச்சினை ஏற்பட்டு எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஒரு சில மாதங்கள் கழித்து வழக்கு தாக்கல் செய்தேன் . நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.29 14:35:56 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.